# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC. 1024/2024
Sessions)

( Prosecution P.W.1
Deposition of witness for (Defence
(Court

| Name | கண்ணராஜ் | -- | |
|---|---|---|---|
| Father's Name | முத்தையா | Calling | தறி தொழில் |
| Village | இராமச்சந்திராபுரம் | Religion | |
| Taluk | வத்திராயிருப்பு | Age | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது வத்திராயிருப்பு தாலுகா, எஸ். இராமச்சந்திராபுரத்தில் குடியிருந்து வருகிறேன். தறி செட்டு வைத்து தொழில் செய்து வருகிறேன். எனது மனைவி பெயர் சொர்ணலெட்சுமி, அவர் இல்லத்தரசியாக இருந்து வருகிறார். எங்களுக்கு தினேஷ் குமார், ஆகாஷ் குமார் என்ற இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். இவ்வழக்கில் இறந்துபோன ஆகாஷ்குமார் எனது இளைய மகன் ஆவார். ஆகாஷ் குமார் B.Pharm படித்துமுடித்துவிட்டு மருந்துக் கம்பெனியில் சிவகாசி, திருவில்லிபுத்தூர், இராஜபாளையம் ஏரியாக்களில் விற்பனை பிரதிநிதியாக வேலை பார்த்து வந்தான். 30.11.2023ம் தேதி மாலை 06.45மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது ஆகாஷ்குமாரின் நண்பரான பார்த்திபன் என்பவர் என்னிடம் போன் மூலமாக என்னிடம் TN84L4998 என்ற எனக்குச் சொந்தமான இருசக்கர வாகனத்தில் எனது மகன் சிவகாசியில் வேலை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்ததாகவும், மாயத்தேவன்பட்டி விலக்கு அருகில் வந்து கொண்டிருந்தபோது அவருக்கு எதிர்திசையில் வந்த இருசக்கர வாகனம் சைகை எதுவும் காட்டாமல், இண்டிகேட்டார் போடாமல் கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும் வந்து என் மகன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி விட்டார். அங்கிருந்தவர்கள் எனது மகனை தூக்கிப் பார்த்தபோது எனது மகன் பின் மண்டையில் அடிபட்டு எனது மகன் சுயநினைவின்றி இருந்துள்ளதால் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு தனியார் ஆம்புலன்சில் கொண்டு சென்றதாகவும் எனது மகனின் மீது மோதிய இருசக்கர வாகனத்தின் எண் TN84L2638 என்றும் அது எலெக்ட்ரிக் பைக் என்றும் தெரிவித்தார், ஆனால் அந்த வாகனத்தை ஓட்டி வந்த நபரின் பெயரை அப்போது என்னிடம் தெரிவிக்கவில்லை. உடனடியாக நானும், எனது மனைவியும்

திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவனைக்கு வந்து பார்த்தோம், எனது மகன் இறந்த நிலையில் காணப்பட்டார். அதன் பின்னர் அங்கு வந்த மல்லி காவல்நிலைய போலிசாரிடம் நடைபெற்ற சம்பவத்திற்கு நான் புகார் வாக்குமூலம் கொடுத்து கையொப்பம் செய்தேன். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். பின்னர் எனது மகனின் மீது மோதிய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரின் பெயர் வைரம் என்றும், மாயத்தேவன்பட்டியைச் சேர்ந்தவர் என்றும் பின்னர் தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் வட்டார போக்குவரத்து அலுவலத்திற்கு சென்றபோது தான் எனது மகன் மீது மோதிய வாகனத்தை ஓட்டியவர் பெயர் வைரம் என்று தெரிந்து கொண்டேன். போலிசார் தான் மேற்படி பெயரை என்னிடம் சொன்னார்கள். பார்த்திபன் எந்த போன் நம்பரிலிருந்து எந்த போன் நம்பருக்கு தகவல் சொன்னார் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. பார்த்திபன் விபத்து சம்மந்தமாக எனக்கு போன் மூலமாக தகவல் எதுவும் கூறவில்லை என்பதால் தான் அந்த போன் நம்பரை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விசயங்கள் போலிசார் சொல்லிக்கொடுத்தப்படி சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN Digitally signed by M VEERANAN Date: 2026.01.19 11:43:29 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**